# தமிழ் முரசு



பதிப்பாசிரியர்:

[illegible]

# தமிழ்முரசு

நான்காவது புத்தகம்

பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞான கிராமணியார்

விலை நான்கணா

வெளி நாடு ஐந்தணா

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை—1

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| தமிழர் அறிக்கை ! | .... பாரதிதாசன் | 5 |
| புலவன் வருமை | .... மு. கோவிந்தசாமி | 7 |
| நல்ல நாடு | .... "ஞானம்" | 13 |
| ஒரே ஏக்கம் ! | .... மு. வரதராசனூர் | 17 |
| தமிழ்க் கலை | .... திரு. வி. க. | 22 |
| தமிழர் எழுச்சி | .... ப. ஜீவானந்தம் | 28 |
| முத்தமிழ் | .... அன்பு கணபதி | 32 |
| கண்ணகிக்குக் கோயிலுண்டா? | .... ம. பொ. சி. | 37 |
| தமிழன் திருநாள் | .... மு. கோவிந்தசாமி | 42 |
| பொருளாதாரப் புரட்சி | .... "பாமரன்" | 45 |



**1946-ம் வருடம் ஆகஸ்ட் மாதம்**
**உரிமை பதிவு செய்யப்பட்டது.**



கவிஞர் பாரதிதாசன்
(கனக. சுப்புரத்தினம்)

# தமிழர் அறிக்கை!

பாரதிதாசன்

கட்டாயத் தமிழ்க்கல்விக் கழகம் யாண்டும்
கவினுறவே தமிழ்நாட்டில் நிறுவ வேண்டும்.
தட்டாமே அரசியலின் துறைகள் யாவும்
தமிழ்ப்பேச்சால் தமிழ்எழுத்தால் நடத்தல் வேண்டும்.

பட்டோம்இந் நாள்வரைக்கும்! தமிழர் ஒன்று
பட்டவுள்ளம் விடுத்திட்ட அறிக்கை இஃது!
கொட்டினோம் தமிழ்முரசு! நாட்டை ஆள்வோர்,
குறைமுடிக்க! இல்லையெனில் புரட்சி தோன்றும்!

தமிழ்நாட்டில் துறைதோறும் தமிழ ருக்கே
தலைமைஇருந் திடவேண்டும். தமிழர் நாட்டில்
தமிழர்களாற் குழுஅமைத்துச், சட்ட திட்டம்
தமக்கான முறையினிலே அமைக்கச் சொல்லி,

அமைத்தபடி நிறைவேற்றி வைத்தல் வேண்டும்!
ஆள்வோர்க்குத் தமிழர்விடும் அறிக்கை இஃது!
தமிழ்முரசு கொட்டினோம் இணங்கா விட்டால்
சடசடெனச் சரிந்துபடும் ஆட்சிக் கோட்டை!

திராவிடரின் பகைவர்க்கே அடிமை யானோர்,
திராவிடர்க்கு நலம்புரிதல் குதிரைக் கொம்பே!
அரியதமிழ் நாட்டுரிமை வேண்டும்; அன்றே
அன்புள்ள தெலுங்கர்க்கும் கேரளர்க்கும்

உரிமையினை நாட்டுவதும் தமிழர் வேலை!
ஒன்றுபட்டோம்; சாதியில்லை; சமய மில்லை;
குரல்கேட்க ஆள்வோரின் காதே! ஒப்பம்
கூறுகவாய் இன்றேல் புரட்சி தோன்றும்.

---

ஒரு புரட்சியைப்பற்றி எழுத முற்படும் சரித்திராசிரியர்கள், அதன் சம்பந்தமான சகல காரணங்களையும் ஆராய்ந்தறிந்து பாரபட்சமின்றி எழுத வேண்டும். அவ்விதம் ஆராய்ந்தால்தான், தாறுமாறுகத் தோன்றியது ஒழுங்கானதாகவும், விகாரமாகத் தோன்றியது வீரம் செறிந்ததாகவும், வெளிப் பார்வைக்கு அழகான செய்கை உண்மையில் அவலட்சணமும் அக்கிரமமும் நிறைந்ததாகவும் அதனதன் சுயரூபத்துடன் காட்சியளிக்கும்.

—**வீர சாவர்க்கர்.**

# புலவன் வறுமை

மு. கோவிந்தசாமி

புறநானூற்றில் முழுவதும், இடையிடையே நம்மைக் கவர்வது வறுமைக்காட்சி. வறுமை நிறைந்த புலவன் வளமிக்க அரசனிடம் பரிசில் கேட்கிறான். அப்புலவன் அறிவில்தான் வறுமை தோன்றுகிறதா? அல்லது அவனறிவே வறுமையாக மாறுகிறதாவெனச் சொல்லமுடியாது. ஆனால் அவ்வறுமையில் ஒரு செம்மையைக் காண்கிறோம்.

வெறுக்கத்தக்க, புறக்கணிக்கத்தக்க, துன்பமிக்க வறுமையில் ஓர் செம்மையின் காட்சி. ஆம்; நாற்றமுடைய வெறுக்கத்தக்க சேற்றில்தானே செந்தாமரை பிறக்கிறது! நஞ்சுடைய நாகத்தினிடம் நல்ல மணி பிறக்கிறது! அப்படித்தான் உலகில் அறிஞர் (ஞானி) வாழ்க்கைகளை யெல்லாம் அலசிப்பாருங்கள்! ஒரே வறுமை, வறுமை செல்வராய்ப் பிறக்கும் அறிஞருங் கூடத் தாமே வறுமையை வரவழைத்துக் கொள்கின்றனர், எளிமையாக வாழ்கின்றனர். இதன் காரணம் என்ன?

சுடச்சுடப் பொன்னின் மாற்றும் ஒளியும் மிகுந்து கொண்டே செல்கிறது. கொல்லன் கூடத்தில் காய்ச்சிய இரும்பு எவ்வளவுக் கெவ்வளவு சம்மட்டியால் அடிபடுகிறதோ அவ்வளவும் அதன் உருவத்தில் அழகும் மதிப்பும் மிகுதியாகும். அதுபோலவே வறுமைக்கனல் சுடச்சுட, துன்பச் சம்மட்டி தாக்கத்தாக்க மனித (அறிஞர்) வாழ்வு மாறுதலடைகின்றது; மேன்மையடைந்து கொண்டே போகின்றது.

"பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினும் நனியின் னாதே" எனக்

குமணன் கூறுவதில் புலவனின் செம்மை (பாடு)யும் அவனது வறுமை (வாட்டம்)யும் ஒன்றிய நிலையை யுணர்கிறோமல்லவா?

வாழ்க்கையில் சீரிய பண்பும், நாகரிகமும் பொலிய நிற்போரெல்லாம் வறிஞராக, அல்லது தாமே வறுமையை ஏற்றவராக இருக்கின்றனர். பண்புயர்ந்த நாகரிகத்திற்கும் பசிகொளுத்தும் வறுமைக்கும் நெருங்கிய உறவுண்டு. துன்பத் தினிடையேதான் கலை மலர்கின்றது. கவிதை உருவடைகின்றது. 'ஜினராசதாசர்' என்பார் இதுபற்றி விளக்கிக் கூறுகிறார். ஒன்று அழியும்போது மற்றொன்று பிறக்கும். விதையழிய செடிதுளிர்க்கும். மலரழியக் காய்தோன்றும். வாழ்விலும், வறுமையினால் உடலில் உள்ள ஆற்றல் வாட வாட, அங்கு வளையப்படுகின்றது கலையழகு, கவியின்பம். இசையாக, நாடகமாக, காவியமாகக் கவின்பெறுகின்றது. இதுவே தமிழனின் (புலவன்) சீர்மை. தாகூர், பாரதி, தாந்தே ஆய உலகக் கவிகளின் உள்ளம் விரிந்ததும், பண்பு எழுந்ததும், கவிதை கனிந்ததும் எளிய, வறுமை சூர்ந்த வாழ்வில் தானே!

சமைத்துப் பல மாதங்களாயிற்று. அடுப்பில் காளான் பூத்துக்கிடக்கிறது. பசித்துன்பத்தால் தேம்பித்தேம்பி தாயின் பாலற்ற முலைகளைச் சுவைத்துச் சுவைத்துப் பார்க்கும் குழந்தை பால் வராமையால் அழுகிறது. பாவம்! நீண்ட நாள் பாலில்லாமையாலே முலைக்கண்களும் தூர்ந்துவிட்டன சேயின் முகத்தைச் காணும் தாயும் கலங்குகிறாள். அவள் நிலை புலவனும் அடங்காத் துயரடைந்து அரசனை நாடுகிறான், இஃதோர் வறுமைக் காட்சி. பெருந்தலைச் சாத்தன் என்ற புலவன் பாடுகிறான். பாடும் வலிமையை ஈந்ததும் அவ்வறுமைதானே?

குழந்தைக்குப் பாலில்லை. குப்பையில் கிடக்கும் கீரையைப் பறிக்கிறாள். கிடைப்பது வேறில்லையாதலால், அந்த கீரையும் குறைந்து, தளிர்கள்தான் உள்ளன. போட உப்புமில்லை. கொஞ்சம் புளிச்சுவையேனும் கலக்கலாமெனில் மோர் இல்லை. சோறு எங்கே கிடைக்கப்போகிறது? வெறுங்கீரையை அனல் காட்டி உண்கிறாள். ஒரே ஆடை. அதுவோ கந்தல். தப்பிக் கட்டலாமென்றாலோ பின்னர் துணி நிற்காது, கிழிந்து உதிர்ந்து விடும். ஆதலால் ஒரே அழுக்கு. இந்நிலையில் தெய்வத்தை நொந்துகொள்கிறாள் மனைவி. காண்கிறான் புலவன், கவிதை யாகப் பாடுகிறான். இதனைப்பாடும் பெருஞ் சித்திரனார் வறுமையை இயற்கையாக வருணிப்பதில் இணையற்றவர்.

இத்தனை வறுமைக் கிடையிலா அந்த செம்மை மலர்கின்றது. எந்த செம்மை? அச்சமும், கோழைத்தனமும் வறுமையில் வளர்வது. ஆனால் அறிவு அதனை மடித்துவிடுகின்றது. பகையரசன் ஒருவன் ஔவையைக் கேட்கிறான். 'நும் நாட்டில் வீரரும் உளரோ' என.

"அடிக்க ஓங்கும் கோலை யஞ்சாமல், சீறிப் படமெடுக்கும் நாகமனைய வீரச்சிறுவரும் உளர். பொதுமன்றில் கட்டிய முடிவு. காற்றினால் ஆடிக்கிளையில் மோதும்போதெழும் ஓசையைப் போர்முரசொலி யெனப் பூரித்துத் தோள்கொட்டும் என் அரசனும் உளன்" என மண்டையிலடிக்கிறாள் ஔவை. என்ன அஞ்சாமை! சோழன் நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் உடன் பிறந்தோர். இருவரும் பகைத்துப் போர்க்கலஞ் சேர்ந்தனர். கோவூர்க்கிழார் என்ற புலவர் வருகிறார். நீவிர் இருவரும் அண்ணன் தம்பிகள். நுங்கள் போர் பகைவர்க்கு நகைப்பைத் தவிர வேறு பயன்தராது, எனப்பல அறிவுரை கூறுகிறார். அரசர் அடங்கிப் பணிகின்றனர். போர் நிற்கிறது.

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும்
நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வுபடும்"

என்ற வழக்கு மறைகிறது.
தமிழர் அறிவின் முன் அவர் வறுமை அகன்றுவிட, அவர் தம் செம்மையே சிறந்து நிற்கிறது. அரசன் புலவற்குத் 'தலை வணங்குகிறான்.

நன்னன் என்ற வள்ளல் நீதி தவறுகிறான். அவன் தம்பியும் மற்றோர் இளவரசனும் அமர்ந்திருக்கிறார்கள். அங்கு சென்ற புலவன் நன்னன் தம்பியைத் தவிர்த்து, மற்றவனை மட்டும் தழுவிக்கொள்கிறான். இளவிச்சிக்கோ கோபமும், நாணமு மடைகிறான்; ஏன் என்கிறான்? நின் அண்ணன் வள்ளலாயினும், அநீதி செய்தான். ஆகலின் புலவர் அவனை அடைவதில்லை. நீ அவன் தம்பி! என்கிறார் அறமுடைய புலவர். என்ன நேர்மை! இன்று அரசாங்க அலுவலாளர் (உத்யோகஸ்தர்) எவ்வளவு லஞ்சம், அநீதி, கொடுமை செய்யினும் அவர்களை வெறுத்தொதுக்கும் அறிஞர் எத்தனைபேர்? பின், வறியருக்குச் சொல்வானேன்! அதிகாரிகள் திரும்புமுன் அடியேன் என்று மண்டியிடக் காத்திருக்கின்றனரே! என்ன இழிவு!

புகழுக்கு உயிரும் கொடுப்பர், பழியெனில் உலகமே பரிசாகக் கிடைத்தாலும் செய்யார். தன்னை மறந்து, பிறர்க்கென உழைப்போர் உண்மையால் உலகம் உயிருடன் இருக்கிறது. உண்மையான மனித வாழ்வின் இக்குறிக்கோள் ஓர் புலவன் அறிவால் குறிக்கப்படுகின்றது.

"நெற்கதிர்களைத் திருடி வளையிற் சேர்க்கும் எலி போன்றார் நட்புவேண்டாம். ஆனால் இடப்பக்கத்தே வீழ்ந்த இரையை

விட்டு, மறுநாள் வலத்தே வீழ்ந்த யானையை யுண்ணும் மான முடையார் நட்பே வேண்டும்" என்கிறார் மற்றோர் புலவர்.

"படையும் வீரமும் படர்ந்த அரசர் பண்பு இல்லாதவரா யின் அவரைப் புகழமாட்டேன். ஆனால், ஆடுமேய்ந்து மீத முள்ள கீரையைக் கொய்துண்ணும் அத்தனை எளிய சீறூர் மன்னனேனும் பண்புறித் தொழுகும் உணர்வுடையோரையே யாம் வியப்பேம்" என வீறுடன் விளம்புகிறான். "மாடலன் மதுரைக் குமரன்" எனும் அறிஞன். இங்ஙனம் அஞ்சாமை, நீதி, நேர்மை, நட்பு, அறிவு, பெருமை இவையெல்லாம் இணைந்த புலவர் வாழ்வில் வறுமையா தோன்றுகின்றது? அங்கு விஞ்சி நிற்பது செம்மையல்லவா? அறிஞனின் வறுமை யில் ஓர் உயர்வு. அரசன் பெருக்கத்தில் ஓர் பணிவு.

"பெருக்கத்து வேண்டும் பணிவு சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு"

என்ற குறள் வாழ்வு அங்கு திரள்கின்றது. செல்வமுடையவன் பணிவில்லையேல் பயனடையமாட்டான். வாழ்வின் நலனில் நஞ்சு கலந்துவிடும். ஏழை நிமிர்ந்து நில்லாவிடில் எல்லோரும் ஏளனம் செய்வர்; மதிக்கமாட்டார். அதனால் ஊக்கமழிந்து முன்னேற்றந் தடைபடும். அத்தகைய வறுமையிற் பணியாது நிமிர்ந்து நிற்கும் மானமுடைய வாழ்வினைத் தமிழர் வாழ்கின் றனர். அவர் தம் தொண்டு வாழ்விற்குத் துணைபுரிய, நாட்டில் மக்களெல்லாம் மலர்ச்சியுடன் முன்வருகின்றனர். பத்துப் பாட்டிலே தமிழ் நாட்டுக் குடிகள் எங்ஙனம் புலவரை வரவேற் றுப் போற்றுகின்றனர் என்பது விளக்கமாக உரைக்கப்படு கின்றது.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்"

என்ற வாய்மொழி அறிஞர் வாழ்வில் அகப்படுகின்றது. நாடு வாழத் தம் வாழ்வைத் துறக்கின்றனர் புலவர். அப் புலவர் வாழ்வே தாம் இல்லறம் நடத்துகின்றனர் மக்கள் பின் வறுமை என்பது எப்படித் தெரியும் ?

ஒப்புரவே (தொண்டு) உயர்ந்த வாழ்வு. ஓய்வெல்லாம் அதற்கே உழைக்க வேண்டும். துன்பத்தை யெல்லாம் பொறுக்கும் துணிவின்றி தொண்டு செய்வதெப்படி ? செல் வனுக்கு ஓய்வேது ? செல்வத்தை வளர்க்க, காக்க அவனே துன்பத்தை விலைக்கு வாங்கிக் கொள்கிறானே ! ஆனால் பிறர்க் குழைக்கவோ, அதில் ஒரு சிறு துன்பப்படவோ அவன் மனம் ஒருப்படாது. வறுமையில் எப்போதும் ஓய்வு. வறு மைத் துன்பத்தைப் பொறுத்தவனுக்கு மற்ற துன்பங்கள் எம்மாத்திரம் ? வறுமை நிறைந்த புலவன் வளம் நிறைந்த பாடல்கள் பாடுகிறான். அவன் வறுமை ஒரு வலிமையைத் தருகிறது. துன்பமே உடலுக்கு இயற்கையென உணர் கிறது. மனதைத் தவிரத் துன்பமொன்றில்லை யெனத் தெரி கிறது. இன்னாமையை இன்பமாகக் கொள்கிறது. எதிரியும் மகிழும் நல்வாழ்வு மலர்கிறது.

மக்கள் வாழ்வில் எளிமையும், ஏற்றமும் செழிக்கத் தொண்டாற்றுவதே அறிவின், தொண்டர் கடன். இன்றைய உலகில் இயந்திர, ஆடம்பர செல்வ வாழ்வு வளர்ந்தது. ஓய் வில்லை, பணிவுமில்லை. நாகரிகம் சாய்ந்தது. போர்கள் மலிந்தன. உலக அமைதி குலைந்தது. இனியேனும் உல கினைச் செல்வர் ஆளாமல், எளிமையும், செம்மையும் ஆள வேண்டும். காந்தியடிகளின் முயற்சி அதுதான். கிராமங் களே அதற்குத் தகுதி. ஏசுவின் உரைகளும் அதற்கே. வள்ளுவர் வாய்மையும் அந்நெறியில் வளர்ந்ததுதான். அத்தகு வறுமையிற் செம்மை யுயர்ந்த வாழ்வு தமிழர் வாழ்வு. அது வருக !

# நல்ல நாடு

"ஞானம்"

தமிழகத்தை நான்கு வகையாகப் பிரித்தனர் பண்டைத் தமிழர். மலையும், மலைசார்ந்த இடமும் ஒருவகை. காடும், காடுசார்ந்த இடமும் மற்றொரு வகை. வயலும், வயல் சார்ந்த இடமும் இன்னொரு வகை. கடலும், கடல் சார்ந்த இடமும் பிறிதொரு வகை. இந்நான்கும் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாகும். இதனாலேயே நிலத்திற்கு நானிலம் என்றும் பெயர் வந்தது.

இந் நான்கு நிலங்களிலும் சிறந்தது இன்னது என்பதைப் புறநானூற்றுப் பாடலொன்றில் ஔவைபிராட்டி அறிவிக்கின்றாள்.

நிலத்தைப் பார்த்துச் சொல்வது போன்று அமைந்துள்ள அப்பாடல் பின்வருமாறு :—

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

[அவல் - பள்ளம்; மிசை - மேடு; எவ்வழி - எந்த இடத்தில்]

நிலமானது, ஒன்று நாடா யிருக்கட்டும்; ஒன்று காடா யிருக்கட்டும்; ஒன்று பள்ளமா யிருக்கட்டும் ஒன்று மேடா யிருக்கட்டும். எந்த இடத்தில் மக்கள் நல்லவராக இருக்கின்ற

னரோ அந்த இடத்தில் அந்த நிலமும் நல்லதாயிருக்கின்றது என்பதே மேற்படி பாடலில் ஔவை தெரிவிக்கும் கருத்து.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஔவை கண்ட இந்த முடிவு எக்காலத்தும், எந்நாட்டிற்கும் பொருந்துவதாகும்.

இனி, மக்களில் நல்லோர் யாவர்? அன்பு, அறிவு, ஆண்மை ஆகிய மூன்று குணங்களும் ஒருசேர வாய்க்கப் பெற்றவரே நல்லோர் எனப்படுவர். இம்மூன்றில் ஒன்று குறையினும் அவர் உருப்பால் மனிதரேயாயினும் உள்ளத்தால் மனிதத்தன்மையில் குறைவுடையவரேயாம்.

அன்புள்ளம் மட்டும் இருந்து அறிவு, ஆண்மைஆகியவை இல்லாதிருப்பின் அத்தகையோர் தீயோரால் வஞ்சிக்கப்படுவர். எனவே, அவரால் நாட்டிற்கு நன்மை இராது.

அறிவு நிரம்பிய ஒருவரிடத்து அன்பும், ஆண்மையும் இல்லாதிருப்பின் அத்தகையோர் சூட்சி மனம்படைத்தவராய் பிறரை வஞ்சிப்பர். மேலும் அத்தகையோர் மக்கள் மனவழி தாங்கள் இயங்காது, தம் வழி மக்கள் இயங்க வேண்டுமென்று எண்ணுவர்.

உலகத்தை நடத்திச் செல்லும் அறிவுடையவராயினும் அவரிடம் அன்புள்ளம் இல்லையாயின், அவர் வழி உலகம் இயங்காது. ஏனெனில் அன்புள்ளமின்றி, சூட்சி வயப்பட்டுள்ள அறிவு உலகத்தோரால் நம்புதற்குரியதன்று.

இனி, ஆண்மை மட்டும் இருந்து அன்பும், அறிவும் இல்லையாயின் அத்தகையோர் முரடர் எனப்படுவர். இவரால்

நல்லோருக்கும் நாசம்விளையும். எனவே, இத்தகையோர் உலகத்தினரால் வெறுக்கப்படுவர்.

பகுத்தறிவு, பரந்த அன்பு, சிறந்த ஆண்மை ஆகிய மூன்று குணங்களும் பொருந்தியவரே நல்லோரெனப்படுவர். அத்தகைய நல்லோராலேயே ஒரு நாடு சிறப்பெய்தும்.

மேற்சொன்ன மூன்று நற்குணங்களும் ஒருவரிடத்தே சமத் தன்மையில் காணப்படுவதும் அரிதேயாகும்.

ஒன்று மிகுந்து ஏனைய இரண்டும் குறைந்து இருப்பதும் இயற்கையே.

அன்பால் உயர்ந்திருப்பவர் உயிர்கள் எல்லாம் தொழும் உத்தம ஞானியாகின்றனர். அறிவால் மிகுந்திருப்பவர் உலகத்திற்கு வழி காட்டி நடத்திச் செல்லும் ஒப்பற்ற தலைவராகின்றனர். ஆண்மை மிகுதியாக உள்ளவர் தீயோரை அழித்து நல்லோரைக் காத்து நிற்கும் சிறந்த வீரராகின்றனர்.

இத்தகைய ஞானிகளும், தலைவர்களும், வீரர்களும் நிரம்பிய நாடே '**நல்ல நாடு**'

அதனால்தான், "அன்பினோடு அறிவு சேர்ந்த ஆண்மை வேண்டும் நாட்டிலே" என்றார் நாமக்கல் கவிஞர்.

# தமிழரும்
# பிரிட்டிஷ் திட்டமும்

★

ஆக்கியோன்:
ம. பொ. சிவஞான கிராமணியார்

★

விலை அணா ஆறு

★

சொற்ப பிரதிகளே உள்ளன
விவரங்களுக்கு
எழுதுங்கள்

★

"தென்றல்" காரியாலயம்
தியாகராயநகர் :: சென்னை

# ஒரே ஏக்கம்!

மு. வரதராசனார்

தொழில் நிலையம், ரயில் நிலையம், பஸ் நிற்கும் இடம், உணவு விடுதி, உய்யானம் முதலான பல இடங்களிலும் பழகினவர் ஒருவர் ஒருவரைக் காணும்போது பேசப்படும் பேச்சுக்கள் சில உள்ளன. இந்தப் பேச்சுக்கள் பலமுறை பேசினாலும் சலிப்பு ஏற்படாத துறைகள். உணவுப் பங்கீடு, தேர்தல் வெற்றி தோல்வி, அரசியல் தலைவர் சிலருடைய போக்கு இவைகள் இத்தகைய பேச்சுத் துறைகளாகும். இவைகளைப் போலவே இந்தப் பொது இடங்களில் பயின்று பேசப்படும் மற்றொரு துறை வியாபாரப்போக்கு; அதாவது வியாபாரத்தால் பெருகும் வருவாய் முதலியன.

"என்ன போங்க'! இந்த ஆபீசில் மாதம் அறுபது ரூபாய் காசுக்கு இரவும் பகலும் உழைத்து உயிரை விடுகிறோம். எங்கேயாவது வெற்றிலை பாக்குக் கடை வைத்திருந்தாலாவது சில ஆயிரங்கள் சேர்த்திருக்கலாம்" என்பார் ஒருவர்.

"அவ்வளவு என்? மளிகைக்கடை வைத்திருந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றுக்குப் பத்தாகச் சம்பாதித்திருக்கிறார்கள். எனக்குத் தெரியும்; எங்கள் வீட்டுக்கு மூன்றுவது வீட்டில் இருந்தவர் ஏழையாய் இருந்தார். இப்போது அரை லக்ஷம் முதல் வைத்திருக்கிறார்" என்பார் இன்னொருவர்.

"என் பெண்ணுக்குப் பத்துவயது ஆகிறது. மனைவி ஓயாமல் தொந்தரவு செய்கிறாள். என்ன செய்வது என்று தெரியவில்லை. வேறு ஒன்றும் இல்லை. காதுக்கு நல்ல தொங்

கட்டம் வாங்கிப்போட வேண்டும் என்று சொல்கிறாள். அவள் சொல்வதும் உண்மைதான். இந்தக் காலத்தில் பத்துவயது ஆன பெண்ணுக்கு ஒரு தொங்கட்டம் வாங்கிப்போடாமல் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது நல்லதா? நானே ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியன். நூறுரூபாய்க்கு எங்கே போவேன்? கடன் கேட்டாலும் யார் கொடுப்பார்கள்? என்னோடு 1939-ல் ஆசிரியராக இருந்த ஒருவர் இந்தவேலையை விட்டுவிட்டார். சோப்பு, நெருப்புப் பெட்டி முதலான பொருள்களை வாங்கி ஒரு சின்ன கடை வைத்து வியாபாரம் தொடங்கினார். அவர் இன்றைக்கு ஒரு லட்சத்துக்குக் குறைவு இல்லாமல் இருக்கிறார். அந்தக் காலத்தில் மாதம் தவறாமல் என்னிடம் கடன்பட்டார். இப்போது அவருடைய பெண்ணின் கழுத்தில் மட்டும் மூவாயிர ரூபாய் பார்க்கலாம். அதைப்பார்த்துப் பார்த்து என் மனைவி என்னைத் தொந்தரவு செய்கிறாள்" என்பார் மானத்தை மறைக்காமல் உண்மையை வெளியிட்ட மற்றொருவர்.

"ஐயா, நான் சொல்கிறேன். நம்பினால் நம்புங்கள் நம்பாவிட்டால் போங்கள். அண்ணன் ஒரு வக்கீல்; அவரோடு சண்டை போட்டு விட்டுத் தம்பி பட்டணத்துக்கு வந்தார். வந்த இடத்தில் யாரையோபிடித்து அரிசி ரேஷன்கடை ஆரம்பித்தார். படித்தது பத்தாவது வரையில்தான். அதுவும் பத்தாவதில் மூன்று முறை தவறி வீட்டில் நின்று விட்டவர். இன்றைக்கு அண்ணன் அதே வக்கீல்தான். மாதம் இருநூறு ரூபாய்க்கு வழியில்லை. ஆனால் தம்பிக்கு வீட்டைத்தேடி அறுநூறு ரூபாய் மாதம் தவறாமல் வந்து சேர்கின்றது. பெரிய மாடிவீடு வாங்கியிருக்கிறார். வேண்டுமானால் என்னோடு வந்துபாருங்கள், காட்டுகிறேன்" என்பார், சொல்லும் செயலும் வேறுபடாத மற்றொருவர்.

அப்போதுதான் அமைதியான குரலில் இன்னொருவர் பேசத் தொடங்குவார். "எல்லாம் வியாபாரம் வியாபாரம்

என்று பேசினால் போதாது. நானும் வியாபாரியாக இருந்தவன் தான். வியாபாரத்துக்கும் அதிர்ஷ்டம் வேண்டும். சும்மா பேசினால் பயன் என்ன? பட்டணத்திலிருந்து எல்லாரும் ஓடிப் போனார்களே, குண்டுக்கு பயந்து போய்விட்டார்களே, அப் போது நானும் வரணக் கடையைச் சுருட்டிக்கொண்டு போய் விட்டேன். அந்தக் காலத்தில் கொஞ்சம் மன உறுதியோடு பட்டணத்திலேயே இருந்திருந்தால் இன்றைக்கு எனக்குப் பத்து லட்சம் இருந்திருக்கும். அதிர்ஷ்டம் இல்லை. அவசரப் பட்டேன்" என்பார்.

"கொடுக்கிற தெய்வம் தானாகக் கொடுக்கும். இது எல் லாம் வீண் ஆசை. ஒரு வியாபாரமும் செய்யாமலே இருக் கிறார்கள் சிலர். சம்பளம் எழுபது ரூபாய். கிம்பளம் எழு நூறு ரூபாய். இப்படி எத்தனையோ பேர் பணக்காரர் ஆக வில்லையா" என்பார் பற்றற்றவர் ஒருவர்.

"வியாபாரி தனக்கு வருவாயாக ஏழாயிரம் வருவதாகத் தெரிந்து கொண்டுதான், மற்றவனுக்கு ஏழுநூறு ரூபாய் கிம் பளமாகக் கொடுக்கிறான். வியாபாரிக்கு வருவாய் இல்லாவிட் டால், எழுபது ரூபாய் சம்பளக்காரனுக்கு இப்படிக் கிம்பளம் கொடுப்பவர் யார்" என்று ஒருவர் காரண காரிய ஆராய்ச்சியில் நுழைவார்.

எல்லாம் சுற்றிச்சுற்றி வியாபாரப்பேச்சாகவே இருக்கும். எல்லாருடைய மனத்திலும் உள்ள எண்ணம் ஒன்றே; அதா வது, வியாபாரம் செய்திருந்தால் நாமும் பெரிய செல்வராக முன்னேறி இருக்க முடியுமே என்பதுதான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் 'நாகரிகம்' கற்காதவர் சிலர் அதை வெளிப்படையாய்ச் சொல்கின்றார்கள். மற்றவர்கள் மறைத்து மறைத்து வேறு வேறு வாய்பாடுகளால் பேசுகின்றார் கள். இவ்வளவே வேறுபாடு.

நாகரிகம் வளர்ந்த நூற்றாண்டு என்று இதனைக் கூறுகின்றார்கள். ஆனால் விளக்கின் அடியில் இருள் திரண்டு நிற்பதுபோல், இன்று உள்ள நாகரிகத்தின் அடிப்படையில் நிலைபெற்றுள்ள அநாகரிகம் ஒன்று உண்டு. அதற்குத்தான் வியாபாரம் என்று பெயர்.

உணவுப் பொருள்களை உழவர்கள் பாடுபட்டு விளைக்கின்றார்கள். உடைமுதலான நாகரிகப் பொருள்களைத் தொழிலாளிகள் பாடுபட்டு உண்டாக்குகின்றார்கள். ஆகவே, வாழ்க்கைக்கு உதவியாக இருப்பவர்கள் உழவர்களும் தொழிலாளிகளும். அவர்கள் உழைத்த உழைப்பின் பயனை எல்லாரும் அடைகின்றார்கள். பொருள்களை எல்லாரும் அடைவதற்கு முன்னே குறுக்கே நின்று தடுத்துத்தேக்கி ஊதியம் பெறுகின்றவர்களுக்கு வியாபாரிகள் என்று பெயர்.

நல்ல அரசாங்கத்தின் கடமை உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வது; வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வது. அந்த அரசாங்கமே மாசற்ற நாகரிகம் வளர்க்கும் அரசாங்கம்.

ஆனால், அந்த அரசு அமைய இன்னும் பல ஆண்டுகள் ஆகும். அதுவரையில் நாகரிகத்தோடு கலந்து அநாகரிமும் வாழும். அதுவரையில் உழவர்களும் தொழிலாளிகளும் தொல்லைப்படுவார்கள். அவர்கள் உழைத்துக் கொடுத்த பொருள்களை வாங்கித் தேக்கித் தடைப்படுத்தும் வியாபார முறை அது வரையில் செழித்தோங்கும். உழைப்பாளிகள் அரை வயிற்றுக் கஞ்சிக்கு ஏங்கிக்கொண்டு கிடக்கவேண்டும். வியாபாரிகள் உலகத்தை விலைக்கு வாங்கும் செல்வநிலைக்கு ஓங்கிச் சென்று கொண்டிருப்பார்கள்.

இதுதான் உண்மை என்பது முற்போக்கான அறிஞர்க்குத் தெரியும். எதிர்காலத்தில் வியாபாரம் என்பது அகராதியில் மட்டுமே காண வேண்டிய ஒரு சொல்லாக இருக்குமே ஒழிய, வாழ்க்கையில் காணக்கூடிய ஒரு துறையாக இருக்காது. இது வெறுங்கனவு அன்று; அரசியல் அறிஞர் வலியுறுத்தும் உண்மை ஆகும். உழவும் பிறவும் பற்றி அதிகாரம் அதிகாரமாகப் பாடிய திருவள்ளுவரும் வியாபாரத்தைப் பற்றி ஓர் அதிகாரம் கூறாமல், எதையோ விளக்கவேண்டி நேர்ந்தபோது வாணிகத்தைப்பற்றி ஒரு குறளால் குறிப்பிட்டுக் கழித்தார்.

ஆனால் பொருளாதாரப் போராட்டம் யாரையும் விடவில்லை. அதனால்தான் வியாபாரத்தின் உண்மைநிலை அறிந்தவர்களும் காற்று உள்ளபோதே தூற்றிக் கொள்ளப் பாடுபடுகின்றார்கள். அறியாதவர்களும் பொது இடங்களில் பலவாறு பேசிக் கவலையைத் தீர்த்துக் கொள்கின்றார்கள். "வியாபாரம் செய்யாமல் வேறு தொழிலில் ஈடுபட்டதால் ஏழையாய்க் கிடக்கிறோமே" என்ற ஏக்கம் பெரும்பாலோர் உள்ளத்தில் குடி கொண்டிருக்கின்றது.

இப்படி ஏங்கிவாடுவதால் ஒரு பயனும் இல்லை. ஒருவரும் முன்னேறுவது இல்லை. கடமையை மறந்து சோம்பியிருப்பதற்குத்தான் வழி ஆகும்.

என்ன கடமை என்று கேட்கலாம். இப்படிப்பட்ட ஏக்கத்தைத் தொலைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். உழவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் அரசியல் அறிவு ஊட்ட வேண்டும். உழவும் தொழிலும் உலகத்தை ஆளும் காலம் வந்து கொண்டிருப்பதைக் காலக் கண்கொண்டு நோக்க வேண்டும். அதைப்பற்றி எண்ண வேண்டும்; அதைப்பற்றிப் பேசவேண்டும்; உண்மையான எண்ணமும் உள்ளம் கலந்தபேச்சும் சேர்ந்தால் உருப்படியான செயலாய் மாறுவது திண்ணம்.

# தமிழ்க் கலை

திரு. வி. க.

(சென்னை Y. M. C. A. பட்டிமன்ற
முதல் ஆண்டு நிறை விழாவில் பேசியது)

தமிழ் நாட்டில் சில காலமாக புத்துணர்ச்சி தோன்றி யுள்ளது. அவ்வுணர்ச்சி ஆக்கத்திற்குப் பயன்படுமாக! இத்தகைய பட்டி மன்றங்கள் பல இந்நாட்டில் காணப்படல்வேண்டும். இயற்கைக்கு மாறான கொள்கைகளை அழித்துவிடுங்கள். ஆனால், இயற்கைநெறிப்பட்ட கொள்கைகள் இன்று அழிக்கப் பட்டு வருதலைக் காணவருந்துகிறேன். அது கூடாது. இத் துறையில் சிறப்பாக மகளிர் முயற்சி செய்தல் வேண்டும்.

ஆடல், பாடல், நகைச்சுவை இவை பெரிய கலைகளாம். என் சொந்தக் கலை, 'பட்டினிப் பட்டாளத்தை' யொழிக்கும் கலையாகும். அதுவே வாழ்க்கைக் கலை; உயர்ந்த கலை. என் வாழ்வு முழுதும் அதற்கே முயற்சி செய்து வருகிறேன். பட்டினிப் பட்டாளம் ஒழிந்தால்தான் நாட்டில் தமிழ் வளரும்; கலை செழிக்கும்.

பேச்சு ஒரு சிறந்த கலையாகும். இளைஞர் திறம்படப் பேசப் பழகவேண்டும். முன்னர், பேசப்போவதை எழுதிக் கொண்டு பின் பேசவேண்டும். பிறகு குறிப்பெழுதிக்கொண்டு பேசலாம். பழகியபின், ஒருமுறை நினைத்துப் பார்த்துக் கொண்டு பேசலாம். தமிழ் மொழியில் அமைந்தகலை இனியது; உயர்ந்தது.

கலையை மகளென, பெண்ணெனப் பேசும் பழக்கம் நம் நாட்டிற்கே சிறப்பானது. கலையெனில், பெண்; சக்தி; உமா.

கலைக்கு (சக்திக்கு) எல்லை யாது? உலக முழுதும் அவள் எல்லை. அதனைத்தாண்டி சூரிய மண்டிலம், பின் கோள்கள்; எல்லாங் கடந்த ஒளியுலகு; அதற்கப்பாலுமுள்ள விந்து. அதனையுந் தாண்டிய நாதவுலகு. அதுவே கலையின் எல்லை. கலைமகள், காணும் இந்த பருமையுலகு, காணாத நுண்மையுலகு, பருநுண்மை, இரண்டுங் கடந்தவுலகு யாவற்றையுங் கடந்தவள். எல்லா இடமும், காலமும், தத்துவங்களும் கடந்தது கலை. அந்நிலை கண்டவர் எல்லாக் கலைகளையும், கற்காமலே எளிதில் அறிவர்.

கதிரவன், கோள்கள், பூமி இவையெல்லாம் ஆராயும் கலைகளாகும். எல்லாம் மூலக்கலையினின்றே தோன்றுவனவாம்.

காவியம், ஓவியம், இசை, நாட்டியம், விஞ்ஞானம், தத்துவம் யாவும் கலைகளே. இன்று நாம் காணும் கலைகளையெல்லாம் தமிழ்ப்பெரியோர் கண்டனர். 1800 ஆண்டுகளாக அதற்கு இடையூறுகள் எழலாயின.

தமிழ்க் காவியக்கலை மிகச் சிறந்தொன்றாகும். அது வாழ்விற்குத் துணை போகுமா? என ஆராய்வது ஒரு நல்ல கலையெனலாம்.

தமிழ்க்கலையெல்லாம் வீரம்; காதல். இவையிரண்டும் இல்லாதது கலையல்ல. இரண்டும் தேவை. இரண்டும் வேறுபட்டனவல்ல.

கிரீஸ் நாடு ஓவியச் சிறப்போங்கியது. அதனினும் உயர்ந்தது தமிழ் ஓவியக்கலை; ஒப்புயர்வற்றது. தென்காசி, புதுக்கோட்டை, மாபலிபுரம் இங்குள்ள ஓவியங்கள் இணையற்றவை. அஜண்டா ஓவியங்களிலுங்கூட மேலானவை தமிழ்நாட்டு ஓவியங்கள். உலகிலேயே ஓவியச் சிறப்பு கொண்ட தமிழ்நாடு இன்று ஓவிய ஆராய்ச்சியில் குறைந்துள்ளமை கண்டு மனம் வாடுகின்றேன்.

ஜப்பானில் தமிழர் ஓவியம் கலந்துள்ளது; ஓவியத்தின் தாயகம் தமிழகமெனலாம்.

இசையே தமிழ். தமிழ்க்கடவுள் இசை வடிவானவர். 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என ஆண்டவனை அடியார் போற்றினர். முன்னர் இந்தியா மந்திரியாயிருந்த 'மார்லி' என்பவர் நமது ஓவியத்தைப்பற்றி I. C. S. மாணவர்கட்கு ஓர் முறை கூறியுள்ளார்.

"ஓவியத்தில், இசையில் உயர்ந்த நாடு இந்தியா. நாகரீகம் செழித்தநாடு; உலகிற் சிறந்தநாடு. அத்தகைய கலைத்திறனை நாங்கள் எவ்வளவு முயன்றாலும் பெறமுடியாது" என்பதுவே அவர் புகழ்ச்சி.

ஆம், இசைக்கு 'வெப்பநிலை' பொருத்தம் வேண்டும். மிகுந்த வெப்பம் அல்லது குளிர்ச்சியுள்ள நாட்டில் இசை மேம் படல் அருமை. வெம்மையுந் தண்மையுங் கலந்தநிலை இசைக்கு மிகவும் ஏற்றமளிக்கும். நமது வங்காளக்குடாக்கடல் மண் ணில் இசையை வளர்க்குந்திறன் உண்டு என்பதனை ஆராய்ந் துள்ளனர்.

ஆனால், அவ்விசை இங்கு எங்கேயுள்ளது? அகப்போரும், புறப்போர்களும் கலையை அழித்து வருகின்றன. போர், கலையை அழிக்கும்; நாட்டை அழிக்கும்; நாகரீகம் அழிவதைச் சொல்ல வேண்டுமோ? தாகூர் இதுபற்றி நன்கு கூறியுள்ளார்.

தமிழர் சமயம், ஆடல் சமயம்; பாடல் சமயம். இறைவனது நெறியை சம்பந்தர் கூறும்போது, ஆடல் நெறியென்பேன்; பாடல் நெறியென்பேன் என்கிறார். ஆனால் இடைக்கால ஏட்டுவேதாந்திகள் சிலர், கலையால், நாட்டியத்தால் சமயம் அழியுமென்றனர். கலையை வளர்ப்பதே உண்மையான சமயமென்பேன். பழந்தமிழர் வைத்யம், சித்தவைத்யம்; நல்ல முறையாகும். அது மருத்துவக்கலையுள் மேம்பட்டது. குட்

டம், க்ஷயம், எலும்புருக்கி முதலிய நோய்கட்கு இன்றும் சில ஊசிகள் தவிர, நல்ல மருந்துகள் கண்டுபிடிக்கவில்லை. ஆனால்; சித்த முறையில் நல்லமருந்துகள் உண்டு. இன்றும் அந்நோயை எளிதில் போக்குவோர் பலர் உளர். அம்முறையை ஆக்கம்பெற ஊக்குதல் கடனாகும்.

இன்று நம் நாடு வளர எக்கலை வேண்டும்? விஞ்ஞானக் கலை; விஞ்ஞானக் கலையென்பேன். இயற்கைத் தாயின் கருவில் உள்ளத்தில் விஞ்ஞான உண்மைகள் நிறைந்து கிடக்கின்றன. இன்றுவரை மனிதன் உள்ளதைத்தான் கண்டான்; இல்லாததைக் கண்டானில்லை. இயற்கையின் எல்லையை இன்னும் காண முடியவில்லை. அறிஞர்கள் காலதேச வர்த்தமானத்திற்கேற்ப விஞ்ஞான உண்மைகளைக்காண்பர். இயற்கையும் காலத்திற்கேற்ப வெளிப்படும். முதலில் அகல் விளக்கு இருந்தது. எண்ணெய்க்கு ஆமணக்குத் தேவையாயிருந்தது. இயற்கையன்னை ஆமணக்குச் செடியினைக்காண உதவினாள். பின் மக்கள் பெருகினர். மண்ணெண்ணெய் தேவையாயிற்று. பர்மா, ஈரான் முதலிய இடங்களில் மண் (இயற்கை) எண்ணெயைச் சுரந்தது. அதுவும் போதவில்லை. மக்கள் மிகவும் பெருகினர். அன்னை அறிஞனிடம் 'மின்னலைக்' (Electri City) காண அருளினாள். மனிதன் மின்விளக்கைக் கண்டான். இதையுங்கடக்க வேண்டிய காலம் வரலாம்! என்னென்ன வருமோ!

இன்று 'அணு' கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் எல்லாவற்றைஞ் செய்யலாம். ஆனால், ஆக்கத்திற்கே அதனைப் பயன் படுத்தவேண்டும். திருவிளையாடலில் 'எல்லாம் வல்ல சித்தரான படலம்' ஒன்றுள்ளது. முதலில் அதைக்கண்டு வியந்தேன். இப்படியும் இயலுமா? என்றெண்ணினேன். இன்று அணு எல்லா காரியங்களையும் செய்யப்போவதைக் காண்கிறோம்.

'ஆர்டிக்கடல்' நாடு முன் எப்படி இருந்தது? இன்று எப்படி விளங்குகிறது! எங்கும் பட்டணங்கள்! கடலோரமெல்லாம் பட்டினங்கள்! பனிஉறையும் அந்த நாட்டில் இன்று கோதுமை செழிப்பாக விளைகிறது! எப்படி. வளர்கிறது? அங்கு விஞ்ஞான அறிவு வளர்கிறது. மக்கள் வளர்ச்சிக்கேற்ப விஞ்ஞானமும் வளர்ந்துகொண்டே போகிறது. ரஷிய மனிதன் இரும்பு வேண்டுமென எண்ணினான். ஏதோ மணலையும் இன்னும் சில பொருள்களையுங் கலந்தான்; இரும்பு வந்தது. அந்த அறிவு இங்கும் ஓங்கவேண்டும். அப்போது, ஏன் பாலாற்றில் என்றும் வெள்ளம் ஓடச்செய்யக்கூடாது? ரஷியாவில் அப்படிச் செய்திருக்கிறார்கள். நம்நாட்டில் 10 கோடியாயிருந்த மக்கள் 20 கோடியாயினர். பின் 30, 40 கோடியாயுள்ளனர். அடுத்த கணக்கில் 50 கோடியாகலாம். அதற்கேற்ப விஞ்ஞானத்தை வளர்த்துக்கொண்டே போகவேண்டும். நிலநூல் (Geology) உயிர்நூல் (Biology) செடிநூல் (Botany) இவற்றை நன்றாக ஆராய்ந்து அறியவேண்டும். இவற்றையெல்லாம் தமிழாக்கவேண்டும். ஆக்க முடியுமா? எனச்சிலர் அஞ்சுகின்றனர். முடியும்; முடியும். தமிழிலும் ஆங்கிலத்திலும் தேர்ந்த புலவர்களை அத்தொண்டில் புகுத்துதல் வேண்டும். இங்கு தலைமை வீற்றிருக்கும் **சேதுப்பிள்ளையவர்கள்** நல்ல தமிழ்த்தொண்டர்; அவர்கள் இத்தகைய தொண்டில் ஈடுபடவேண்டும். அத்தகைய காலம் மிக அணித்தேயுள்ளதென்பேன். நம் நாடு பழம் பெருமையுடன் பிறநாடுகளோடும் உயரவேண்டுமானால் இன்றைய தமிழ்க்கலையில் விஞ்ஞானக் கலை நிறையவேண்டும். விஞ்ஞானம் படித்தால் நாத்திகராய் விடுவராம்; மாணவர் கெட்டு விடுவராம். இப்படிச் சொல்லுவது பிழையாகும். எதில் விஞ்ஞானமில்லை? கம்பராமாயணத்தில் செடிநூல் (Botany) உண்டு.

ரஷியாவில் முன்னெல்லாம் கலையென்றால், அறைதான் கிடைக்கும். இன்று அங்கு யாவரும் விஞ்ஞானத்தை விரும்பிப் படிக்கின்றனர். அங்கு 'அழகுக்கலை' வளர்கின்றது.

இளைஞர்களின், குழந்தைகளின் முகமே ஓர் கலை. அங்கு அழகு நடஞ்செய்கின்றது. நமது நாட்டில் அதனைக்காண முடியவில்லையே! எலும்புந்தோலுமாக வல்லவோ இளைஞர் காணப்படுகின்றனர்? அவர் முகத்தில் களையில்லை; கலையு மில்லையே!

பறவைகளின் ஒலியும், நீலக்கடலின் காட்சியும் நல்ல கலையின்பந்தான். பசியிருக்குமிடத்தே, பட்டினிப் பட்டாளத்திடம் கலை எப்படிப்பற்றும்? இன்று நான் வரும்போது மூன்று பட்டினிப்பட்டாளங்கள் (கார்ப்பரேஷன், ரிக்ஷா, கவர்ன்மெண்ட் பிரஸ் தொழிலாளர் ஊர்வலங்கள்) போவதைக்கண்டேன். அவர்களிடம் இசையைப்பற்றியோ, கலையைப்பற்றியோ கூறிப் பயனென்ன? இசையைக்கேட்பதைவிட்டு, பட்டினி யெரிச்சலில் 'பளார்' என்று அறைதான் கிடைக்கும். ஆதலினாலே, எந்த நாட்டில் பட்டினிப்பட்டாளம் ஒழிக்கப்படுமோ அங்குதான் உண்மைக்கலை ஓங்கும்.

'விவாதக்கலை' வேண்டும். இன்று ரஷியா 'Dialectic Materialism' பேசுகின்றது. இது 3000 ஆண்டுகட்கு முன்னரே காணப்பட்டது. விவாதக்கலையின் மூலமே அது படிப்படியாக வளர்ந்து இன்றை நிலையுற்றது. வாதப்போர் என்பது அறிவுப்போர். அதிலேயே உண்மைகாண முடியும். விவாதஞ் செய்தல் ஓர் உண்மையான கலை; நிலையானகலை.

நம் நாடு வாழ விவாதம் வேண்டும். அன்று நாடு நன்றாக வளரும். பேச்சில் அழகும், திறமையும், பண்பும் அமைய வேண்டும். இவ்வகையில் பெண்மக்கள் பெரிதும் பங்கு கொள்ளவேண்டும் அப்போதுதான் நம்நாடு நன்னிலையடையும்.

**தமிழ்க் கலை வாழ்க! தமிழ் நாடு உயர்க!**

# தமிழா எழுச்சி

ப. ஜீவானந்தம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று முரசறைந்தான் புறநானூற்றுப் புலவன். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றார் திருமூலர். "சேர்வாரும் ஜெகத்தீரே" என்று எண்டிசையும் எதிரொலிக்க சங்கநாதம் செய்து, அகிலத்தை அரவணைத்தார் தாயுமானவர். உலகத்தை நாடாகவும் வீடாகவும் கண்ட உள்ளம்; "உள்ளியதெல்லாம் உயர்வு உள்ளிய உள்ளம்" தமிழனின் உள்ளம். காலமறிந்து, பொதுமைக்குப் புதுமை செய்வது தமிழனின் மரபு.

"நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்"

என்றும்,

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரதமணித் திருநாடு"

என்றும் மறுமலர்ச்சி சகாப்தத்தில் தமிழ் முரசு ஒலிக்கிறது.

உலகம் தழுவிய தமிழன், "இந்தியா எங்கள் நாடு" என்று இசை முழக்கம் செய்த தமிழன், "வாழ்க நற்றமிழர்" என்று வாழ்த்தியது ஏன்? தமிழினத்தைச் சிறப்பாகக் குறிப்பிட்டு பல்லாண்டு பாடவேண்டியது எதற்காக? காரணம், காலத்தின் சிறப்பு.

தமிழ், தமிழகம், தமிழினம் என்று இன்று பேசாத தமிழன் இல்லை எனலாம். இன உணர்ச்சி அலைமேல் அலையாக மோதுகிறது. "கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும்" காவிரிப் பெருக்காகி வருகிறது.

தமிழ் எது? என்ற கேள்வியைக் கிளப்பி, சர்வ சந்தேகப் பிராணிகள்கூட இன்று மண்டையை உடைத்துக் கொள்வதில்லை. தமிழர் யார்? என்ற வினு சிலபல ஆண்டுகளாக பலபட அடிபட்டு வருகிறது. தமிழகம் எது? என்பதற்கு விடையளிக்கவும், இன்று எழுச்சி பெற்ற தமிழன் நிர்ணய உரிமையை நிலைநாட்ட மும்முரமாக முயல்கிறுன்.

"எங்கள் தமிழ் மொழி" என்று மார்பில் கைவைத்து, மீசையை முறுக்கி தமிழ் வளர்க்கத் தொடங்கியதும், செந்தமிழ் நாடு, "தந்தையர் நாடு" என்று நிமிர்ந்து நின்று உரிமை பாராட்டியதும் தேசீய இயக்கத்தின் விளைவுகள். கொடுங் கோன்மையைமுறியடிக்கவும், அயலரசை ஆங்கில அரசாட்சியை அகற்றவும், குமுறி எழுந்த தேசீய இயக்கம் பரந்து வளர்ந்து பொது மக்களின் ஏகாதிபத்ய எதிர்ப்பு இயக்கமான பின்னரே, தேசீய இனங்களின் எழுச்சி தெளிவாக உருவெடுத்து ஓங்கி வருகிறது. தமிழின எழுச்சியும் இந்த உண்மைக்கு விலக்கன்று.

தமிழினம் ஓங்க, தமிழகம் செழிக்க, தமிழர் குடி அரசு மலர, தமிழினத்தை ஒன்றுபடுத்துவதே முதல் வேலையாகக் கொள்ளவேண்டும்.

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே"

என்ற புதிய தமிழினத்தின் 'பள்ளுப்பாட்டை' முதன்முதலில் உலகுக்கு அறிவித்தவன் பாரதி. "தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று பாடிய நாமக்கல் கவிஞர் பாரதி வழியில் வந்தவர். தமிழினத்தைப் பற்றிய இவர்கள் கருத்துக்களை யெல்லாம் ஏற்று பல திறப்பட்ட அரசியல் கட்சியினரும், தமிழினத்தைப்பற்றிய பொதுவான ஒருகருத்தை உருவகப்படுத்தி உழைக்கவேண்டும்.

"தமிழ் நாடு தமிழருக்கே" என்ற கோஷம் தமிழ் நாட்டில் கேட்கத் தொடங்கி சில ஆண்டுகள் ஆகிவிட்டன. தொடக்கத்தில், குருட்டு வேகத்தில் மொட்டையாக கிளப்பப்பட்ட கோஷம் இன்று சதையும் ரத்தமும் பெற்று தெளிந்த உருவமடைந்துவிட்டது.

தெலுங்கன் 'விசால ஆந்திரம்' கோருகிறான். மலேயாளி, 'நவீன கேரளம்' வேண்டுகிறான். கன்னடத்தான், 'சுதந்திரக் கன்னடத்தை' நிறுவமுயல்கிறான். தமிழன் 'புதிய தமிழகத்தை' குறிக்கோளாக்கி முன்னேறுகிறான். இன எழுச்சியின் இயற்கையான வளர்ச்சியை இங்கு காண்கிறோம்.

இனப்பிரச்னை உலகத்திற்கெல்லாம் ஒரு மாதிரி; தமிழனுக்கு மட்டும் வேறுமாதிரியாக இருக்கமுடியாது. தெலுங்கனுக்கும், கேரளத்தானுக்கும், இனப்பிரச்னை மொழி, பண்பாடு, இயற்கைத் தாயகம், மனப்பான்மை ஒருமிப்பு, பொருளாதாரப் பொது வாழ்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. உலக முழுவதிலும் இன்று தேசிய இனங்கள் இந்த அடிப்படையிலேயே உருவாகியிருக்கின்றன. இதையொட்டியே தமிழனும் தனது கொள்கையை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

தமிழினம் பரிபூரண அரசுரிமைபெற இந்தியா விடுதலே பெற்றாகவேண்டும். அதாவது பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஒழிப்பின் பிறகுதான் சுதந்திரத் தமிழகம் மலரமுடியும். இதைச் செய்ய வல்லார், இந்தியப் பொது மக்களோடு அரசியல் போராட்டத்தில் முன்னேறிவரும் தமிழ்ப் பொது மக்களே. மக்களின் வர்க்கப் போராட்டமாகிய முதலாளித்வ - நிலச்சுவான்தாரித்வ எதிர்ப்புப் போராட்டம் முதிரமுதிர அரசியல் போராட்டமும் வன்மையும் கூர்மையும் வாய்ந்து வருகிறது. வர்க்க உணர்ச்சி

யும், அரசியல் உணர்ச்சியும் வாசல்புறத்தோடு பொதுமக்கள் உள்ளத்தில் புகுந்தால், கொல்லைப்புறத்தோடு குருட்டு நம்பிக்கையும் சாதி, மத பேத உணர்ச்சிகளும் குண்டோட்டம் குதிரையோட்டமாக ஓடும். தொழிற்சாலைகளிலும் வயற்காடுகளிலும் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்ப் பொதுமக்கள் 'விதி'யின் சதிக்கும், சாதிமத சண்டித்தனத்திற்கும் இரையாகிறவர்களல்ல. வாழவும், ஆளவும் தன்னம்பிக்கையுடன் ஒற்றுமையைக் கட்டுகிறவர்களே.

பொது மக்கள்தான் புதிய தமிழினத்தின் பிரதிநிதிகள். இவர்கள் நடத்தும் போராட்டங்களில் தீவிரப் பங்கெடுத்து வெற்றிகண்டு புதிய தமிழகத்தைக் காணவேண்டும்.

---

**டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்.**

கோவை தியேட்டர் ராயலில்

............எனது தேகத்திலுள்ள ஒவ்வோர் மயிர்க் காம்பிற்கும் ஒவ்வோர் உயிரிருப்பின்? அத்தனை உயிர்களையும் எனது தாய் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பலியிடுவேன்............**வாலீசன்**

# தேச பக்தி

(அறிஞர், வெ. சாமிநாத சர்மா எழுதியது)

மகாகவி பாரதி........நாமக்கல் கவிஞர்

ஆகியோரின் உணர்ச்சியூட்டும் பாடல்கள்!

**20—8—46 முதல் தினசரி**

ஞாயிறு, புதன் மாலை 6-30. மற்ற நாட்கள் இரவு 9-30.

**—: திங்களில் நாடகமில்லை: —**

# முத்தமிழ்!

அன்பு கணபதி

“பிற எந்த மொழிக்கும் இல்லாத தனிச் சிறப்பு நம் தமிழ் மொழிக்கு உண்டு. வேறு எந்த மொழி பேசும் மக்களும் எண்ணாத வகையில் இயல், இசை, நாடகம் என முப்பிரிவாகப் பிரித்து, முத்தமிழ் என்ற பெயர் தந்து தமிழை நம் முன்னோர் வளர்த்து வந்திருக்கின்றனர். தமிழ் மொழி, இலக்கண வரம்பு உடையது. கண்ணுதற்பெருங் கடவுள் கழகமோடிருந்து ஆராய்ந்தது நம் கன்னித்தமிழ். பிற மொழிகட்கெல்லாம் காலத்தால் முற்பட்டது. தமிழின் தோற்றம், சரித்திர காலத்திற்கும் எட்டாதது.” என்றெல்லாம் நம் தமிழ்மொழியைப் பெரியோர் பலபடப் புகழ்ந்து பேசி வருகின்றனர். ஆம், பேசி வருகின்றனர்!

இவைகள் எல்லாம் உண்மையே; வெறும் புகழ்ச்சி இல்லை. ஒப்புக்கொள்வோம். ஆனல், பழம் பெருமைகளை விரிவாக எடுத்துப் பேசி விட்டால் மட்டும் போதுமா? அக் கன்னித்தமிழ் - இலக்கண வரம்பு உடைய தமிழ் – முத்தமிழ் இப்போது எந்நிலையில் இருக்கின்றது? அதைச் சற்று எண்ணிப்பாருங்கள். எண்ணுவது அப்புறம் இருக்கட்டும். கொஞ்சம் என்னேடு இப்படி வாருங்கள்!

அதோ தெரிகிறதே, என்ன அது? ஓ! ஆரம்பப் பள்ளிக் கூடமா? இப்போது மணி என்ன? மாலை 4 மணி. சரி, பள்ளிக்கூடம் விடுகிற நேரமாய் விட்டது. அதற்குள்ளாகச் சற்று, பள்ளிக்கூடத்தின் உள்ளே போய் பார்த்து வரலாம். பள்ளிக்கூடத்தின் உள்ளே வந்து விட்டோமா, சரி எதிரே

காணப்படுவது ஐந்தாவது வகுப்பு. சிறிது ஒதுங்கி மறைவாக நில்லுங்கள்; என்ன பாடம் நடக்கிறதென்று கேட்கலாம். நல்லவேளை; தமிழ்ப்பாடம்தான் நடக்கிறது. ஓ, செய்யுள் போல இருக்கிறது.. காதில் விழுகிறதா? ஆசிரியர் பாடம் நடத்துகிறார்:

"பிள்ளைகளே,. உங்களுடைய இளமைக்காலம் தண்ணீரிலே தோன்றும் குமிழியைப்போன்றது. சீக்கிரம் அழியக் கூடியது. உலகில் உள்ள செல்வங்களோ நீரில் உண்டாகும் அலைகளைப் போன்றவை. அழியக்கூடியன. உங்கள் உடம்போ நீரில் எழுதப்படும் எழுத்துக்களைப்போல, ஒரு பக்கம் எழுதி வர மறுபக்கம் அழிந்துகொண்டே வரும். ஆகவே, நீங்கள் இளமைக் காலத்தையோ செல்வத்தையோ உடம்பையோ சதம்-அழியாதன என்று எண்ணாது, கடவுளைத் துதித்து, காலத்திலேயே மோட்சம் அடைவதற்கு வேண்டிய வழிகளைத் தேடிக்கொள்ள வேண்டும். இதைத்தான் உங்கள் பாடப் பகுதியாகிய 'நீதிநெறி விளக்க'த்தில் ஆசிரியர் குமர குருபரர்,

"நீரில் குமிழி இளமை; நிறை செல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை என்னே நமரங்காள்
வழுத்தாத தெம்பிரான் மன்று"

என்று தெரிவிக்கின்றார்.

[திரைகள்-அலைகள்; நமரங்காள் என்றால் நம்மவர்களே என்பது பொருள்; உலக மக்களை ஆசிரியர் விளிக்கின்றார். வழுத்தாதது என்பதற்கு வணங்காதது அல்லது துதிக்காதது என்பது அர்த்தமாகும். மன்று என்பது கோயில் ஆகும்]

என்ன நான் சொல்லிய எல்லாம் விளங்கினவா?

சரி பாடம் கேட்டது போதும், புறப்படுங்கள் வெளியே. போவோம். இப்போது மணி ஐந்து. இன்றைக்குத் தமிழ் இசைச் சங்கத்தில் ஒரு நல்ல இசை அரங்காம். சங்கீத பூஷணம் ஜகந்நாதாச்சாரியார் பாடுகிறார். சற்று நேரம் அதைக் கேட்டுவிட்டு வருவோம். ஓ! இதுதான் இசை அரங்கு நடக்கும் மண்டபம். உள்ளே நுழைவோம். அதோ, சங்கீத பூஷணம் சபை நடுவில் மேடையில் அமர்ந்திருக்கின்றார். 'கச்சேரி' தொடங்குகிறது போலும். முதல் பாட்டுப் பாடுகின்றார். என்ன பாட்டு அது, கவனியுங்கள்! "கதி நீ அல்லால் பதியே தெந்தாய்?" சரி, கொஞ்சம் பொறுங்கள், அடுத்த பாட்டையும் பார்க்கலாம். இதோ முதல் பாட்டு முடிந்தது. இரண்டாவதைத் தொடங்குகிறார்.

"வாழ்வை நம்பாதே—மனமே
வாழ்வை நம்பாதே"

போதும் இசை கேட்டது புறப்படுங்கள் போவோம். அப்பாடா, வெளியே வந்து விட்டோமா? இப்போதுதான் எனக்கு மூச்சு வருகிறது! அது கிடக்கட்டும். நாம் போக வேண்டியது இன்னும் ஓர் இடம் பாக்கியாக இருக்கிறது. அதற்கும் போய்விட்டு வந்து விடுவோம்.

மணி 6 ஆகிவிட்டதல்லவா? சரி, இன்றைக்கு கந்தர்வ நாடக சபையார் பிரத்தியேகமாச் சிறந்த நடிகர்களைக்கொண்டு 'நளாயினி' என்ற நாடகத்தை நடத்துகிறார்களாம். 6-மணிக்கு ஆட்டம் ஆரம்பம். மணியாகிவிட்டது. புறப்படுங்கள், அதையும் போய்ப் பார்த்து வரலாம். நாடகக் கொட்டகைக்குள் வந்து விட்டோம். அதோ, திரை விலகுகிறது. மேடையில் தோன்றுவது யார்? நளாயினியா? தலையில் எதையோ சுமந்து வருகிறாளே, கூடையா? கூடைக்குள் குஷ்டரோகியான அவள்

கணவன் இருக்கின்றார். எங்கே?. தாசி வீட்டிற்குச் சுமந்து செல்கின்றாள். அடடே, கழுவில் தொங்கும் முனிவருடைய காலைக் கூடையால் இடித்து விட்டாளே! கோபங்கொள்கிறாரே முனிவர். 'சூரியன் உதித்ததும் நீ உன் மாங்கல்யத்தை இழப்பாய்' என்று முனிவர் சபித்து விட்டாரே! 'சூரியன் உதிக்காதிருக்கக்கடவது' என்று கற்புக்கரசியான நளாயினியும் எதிர் சாபம் கொடுத்து விட்டாள். நாடகம் முடியப்போகின்றது. எழுந்திருங்கள், கூட்டத்திற்கு முன்பு வீட்டிற்குப் போவோம்.

வீட்டிற்கு வந்துவிட்டோம். களைப்புத்தீர இதோ இந்த சாய்வு நாற்காலியில் சற்றுநேரம் உட்காருங்கள். நானும் இப்படி அமர்கின்றேன்.

இன்றைக்கு நாம் மூன்று இடங்களுக்குச் சென்றோம். எதற்கு? முத்தமிழின் சிறப்பை உணர்வதற்கு! ஒவ்வொன்றாகக் கொஞ்சம் ஆராய்ந்துப் பார்ப்போம்.

ஆரம்பத்தில் பள்ளிக்கூடத்திற்குச் சென்றோம். அங்கு இளைஞர்களுக்கு – இந்நாட்டின் வருங்கால வீரர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்பட்ட பாடம்! 'இளமை அழியும்; செல்வம் நிற்காது; உடம்பு ஒழியும். ஆகவே மோட்சத்தைப்பெற தெய்வத்தை வணங்கு' என்று போதிக்கப்பட்டது.

இரண்டாவதாக இசையரங்குச் சென்றோம். நாள் முழுவதும் உழைத்ததால் உண்டான அலுப்புத்தீர, இசை கேட்கலாம் என்று வந்திருந்த மக்களுக்குப் போதித்த பாடம்-மக்கள் கேட்ட இசை என்ன? 'கடவுளைத் தவிர நமக்கு வேறு கதி கிடையாது; நம்மால் ஆவது ஒன்றுமில்லை. உலக வாழ்வு சதமில்லை; ஆகவே, இந்த மாய வாழ்வை நம்பி மோசம் போகாதே' என்பன ஆகும்.

மூனாருவதாக நாடகம் பார்க்கச் சென்றோம். கற்பின் சிறப்பினை விளக்க-போதிக்க, நளாயினி கதை நடிக்கப் பட்டது. தன்னுடைய கணவனை, வேறு நோக்கத்தில் ஒருத்தி பார்க்கின்றாள் என்பதை நினைக்கவே சகிக்காத மங்கையர் வாழ்ந்த தமிழ்நாட்டில் - கணவன் விருப்பப்படி, அவனைக் கூடையில் வைத்து, மனமார தானே தாசி வீட்டிற்கு எடுத்துச் சென்ற வனிதையின் வாழ்க்கை, கற்பினை விளக்க நாடகமாக நடித்துக் காட்டப்பட்டது.

ஆக, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இவ்வாறு நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக •இன்று வளர்ந்து வருகிறது! இது வளர்ச்சியா? அல்லது இருட்டுக்கு முன்னேற்றமா? தமிழ்நாட்டில் இந்த நிலை இப்படியே வளர லாமா? வளர விடலாமா? இந்த வேகத்தில் தமிழ் வளர்ந்து வருமானால், என்றும் அது கன்னித் தமிழாக இருக்குமா? ஜன்னிகாண்பதற்கு முன்னம் தக்க சிகிச்சை செய்வது தமிழ் மருத்துவர்களின் கடமை அல்லவா?

என்ன, நான் சொல்லுவது சரியா, தவறு? நீங்களே சொல்லுங்கள்!

# கண்ணகிக்குக் கோயிலுண்டா?

ம. பொ. சிவஞானம்

சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகி தேவி தமிழ் நாட்டின் வீர பத்தினியாவாள். கண்ணகியின் கற்பு மேம்பாடும், வீரப்புரட்சியும், எந்நாட்டவரும், எக்காலத்தவரும் போற்றுதற்கும் பின்பற்றுதற்கும் உரியனவாகும்.

கண்ணகியின் மறக்கற்பை வியந்தே சேரன் செங்குட்டுவன் அவளுக்குக் கோயில் கட்டி வணங்கியதுடன், பிற்கால மக்களும் வணங்க வழி காட்டினான். ஆனால், பிற்காலத்தில் தமிழ்மக்கள் இந்த வீரக்கண்ணகி வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தாது கைவிட்டனர் என்ற தவறான எண்ணம் தமிழ் அறிஞர்களிடையேகூட நிலவி வருகின்றது. ஆனால், அன்று தொட்டு இன்றுவரை கண்ணகி வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதே எனது கருத்து.

தமிழகத்தில் பிரதி ஆடித்திங்கள் தோறும் மக்களால் நடத்தப்பட்டுவரும் மாரியம்மன் திருவிழாவை நினைவில் கொண்டு, சிலப்பதிகாரத்தின் **உரைபெறு கட்டுரையை** ஆராய்வார் எவரும் எனது கருத்தை ஏற்றுக்கொள்வது திண்ணம். இதை விரிவாகக் காண்போம்.

கண்ணகி தேவியால் மதுரை நகர் எரிக்கப்பட்ட பின்னர் பாண்டிய நாட்டில் மழை இல்லாது ஒழிந்தது. மக்கள் வறுமையாலும், வெப்பு, குருவு (அம்மை) முதலிய பிணிகளாலும் வருந்தலாயினர். பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பிறகு கொற்கையிலிருந்து பாண்டிய நாட்டை ஆண்ட அவன் மகன்

வெற்றிவேற் செழியன் 'இதனைக் கேள்விப்படுகின்றான். பத்தினித் தெய்வமாகிய கண்ணகியின் சீற்றமே பாண்டிய நாட்டின் சீரழிவிற்குக் காரணம் என்று அவன் நம்புகிறான். எனவே, இளஞ்செழியன் கண்ணகிதேவிக்கு ஆயிரம் பொற் கொல்லரைப் பலிகொடுத்து விழாக் கொண்டாடி நங்கைக்குச் சாந்தி செய்கின்றான். இதன் விளைவாகப் பாண்டிய நாட்டில் மழைபெய்து வறுமையும் பிணியும் அகன்று வளம் பல பெருகியது.

இதைக் கேள்வியுற்ற கொங்கிளங் கோசர், இலங்கைக் கயவாகு, சோழன் பெருங்கிள்ளி ஆகிய மன்னர்களும் ஆடித்திங்களில் விழாக்கொண்டாடி தங்கள் நாட்டிலும் பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளமும் சுரக்கென வாழ்த் தினர்.

இதுதான் உரைபெறு கட்டுரை நமக்கு அறிவிக்கும் செய்தி.

தற்காலத்தில், தமிழகத்தில் ஒவ்வோராண்டும் ஆடி மாதத்தில் மாரி விழா நடப்பதைப்பார்க்கிறோம். **மாரி** என்பது மழையைக் குறிக்கும் தனித் தமிழ்ச்சொல்லாகும். வெற்றி வேற்செழியனும் இதர மன்னர்களும் மழை வரம் கோரியே கண்ணகிக்கு விழாச் செய்ததனால், கண்ணகி விழாவை **மாரி விழா** என மக்கள் வழங்கலாயினர். மாரி விழா நடைபெறும் ஆடிமாதத்திற்குப் பிறகே மழைக்காலம் வருவது வெளிப் படை. அன்று வெற்றிவேற்செழியன் நரபலி கொடுத்ததை ஒட்டியே இன்றும் மாரியம்மனுக்கு உயிர்ப்பலி கொடுக்கப்படு கின்றது.

கண்ணகியின் கதைக்குக் காரணமாக அமைந்தது அவளது காற்சிலம்பே. ஆதலால், இன்றும் மாரியம்மன் விழா

வில் பூசாரிகள் பண்டைக்காலத்தில் மகளிர் அணிந்தது போன்ற காற்சிலம்பைக் கையில் வைத்து ஆடிக்களிக்கின்றனர்.

மாரி ஆலயங்களிலுள்ள சிலையின் முகம் மிக்க கோர வடிவத்தில் செய்யப்பட்டுள்ளதால், சிலர், இது வடநாட்டில் ஆரம்பமாகி, தமிழ்மக்களால் நடத்தப்படும் துர்க்கை அல்லது காளி வழிபாடாகக் கொள்கின்றனர். இந்தக் கொள்கையும் பொருத்தமற்றதே யாகும். கணவன் கொலையுண்டதால் சீற்றம்கொண்டு புரட்சி விளைத்த மறக்கற்பினளான கண்ணகியின் சிலையைச்செய்த சிற்பி, துர்க்கை, காளி முதலிய தெய்வங்களின் உருவத்தை நினைவில் கொண்டே செய்திருக்க வேண்டும்.

சிலப்பதிகாரம் வழக்குரைகாதையில், பாண்டி வேந்தனின் அரண்மனைவாயிலில் கண்ணகியைக்கண்ட வாயிற் காவலனுக்கும் அவளது தோற்றம் காளி, துர்க்கையின் நினைவை ஊட்டியது.

மற்றும், வேட்டுவ வரியில் ஆவேசம் கொண்ட சாலினி கண்ணகியைப்பார்த்து, கொங்கச்செல்வி குடமலை யாட்டி என்றுகூறியதற்கு அரும்பத உரையாசிரியர் "மேற்பட்டு இவளைத்தெய்வமாகக் கொண்டாடுமிடங் கூறியபடியாலே, இவள் துர்க்கையாகவே பிறந்தாள்" என்று கூறுகிறார். இதை எல்லாம் ஆதாரமாகக்கொண்டே கண்ணகியின் உருவச்சிலை துர்க்கையின் வடிவமாக அமைக்கப்பட்டிருக்கலாம்.

சிலப்பதிகாரத்தில், உரைபெறு கட்டுரையேயன்றி வேறு சில காதைகளிலும், எனது கொள்கைக்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன.

வழக்குரை காதையில், •கண்ணகி காவிரிப்பூப் பட்டணத்தில் தோன்றிய பத்தினிப் பெண்டிர் எழுவரைப்பற்றிய வரலாற்றைப் பாண்டியனுக்குப் பகருகின்றாள்•

மேற்சொன்ன எழுவரையே **கன்னிமார்** எனவும் அவர்களது கணவர்களையே **அண்ணன்மார்** எனவும் கொண்டு மாரி கோயிலில் சிலைவடிவில் வைக்கப்பட்டிருக்கின்றது.

பாண்டிய நாட்டில் பஞ்சம் காரணமாக ஆடையின்மையால் தழையை அணிந்தும், எளிதில் கிடைக்கக்கூடிய 'கேழ்வரகு கூழ், கருவாடு, கீரை முதலியன சமைத்துப் படைத்தும் மழை வரம் வேண்டினர்போலும்! அம்மரபையொட்டியே இன்றும் மாரி விழாவின்போது மக்கள் வேப்பஞ்சேலை அணிவதும், முருங்கைக்கீரை, கூழ், கருவாடு முதலியன சமைத்துப் படைப்பதும் வழக்கமாயிற்று.

இந்த மாரியம்மன் வழிபாடு, ஜமதக்னி முனிவரின் ஆணைப்படி, தன் மகனாகிய பரசுராமனால் கொல்லப்பட்ட ரேணுகையின் வழிபாடே என்று கொள்வாருமுண்டு. இது முற்றும் ஆதாரமற்ற கட்டுக்கதையேயாகும். வட நாட்டு அந்தணமாதாகிய ரேணுகைக்கு, மாரி என்ற தமிழ்ப்பெயர் வருவதும், அறக்கற்பினளாகிய அவளுக்குக் கோர உருவம் அமைவதும், உயிர்ப்பலி கொடுப்பதும், கருவாடு முதலியன படைப்பதும் பொருந்தாக் கூற்றேயாகும்.

மாரியம்மன் கோயில்களில் முழு உருவச்சிலையின் முன்னே வைக்கப்பட்டுள்ள பெண்ணின் வெட்டுண்ட தலை தான் பரசுராமனால் வெட்டப்பட்ட ரேணுகையின் தலை

என்றும் சான்றுகூறப்படுகின்றது. மேலே சிலப்பதிகாரக் கதையை ஆதாரமாகக்கொண்டு நான் கூறியுள்ளவை அனைத்தும் உண்மையானால், இந்த வெட்டுண்ட தலை, கோவலனுடையதாக இருக்க நியாயமுண்டு. அப்படியானால் இந்த ஆண்தலையே பெண்தலையாக மாறியிருக்க வேண்டும். இது பிற்காலத்தில் ரேணுகை வழிபாட்டை தமிழ்நாட்டில் புகுத்த எண்ணியவர்களின் வேலையாக இருக்கலாம். இதுவரை நான்கூறியவாற்றால் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு நடைபெற்றுவரும் மாரி விழாவே கண்ணகி விழாவென்றும், அம்மாரியம்மன் கோயில்களே கண்ணகி கோயில்களென்றும் ஐயமற அறியலாம்.

# தமிழன் திருநாள்

மு. கோவிந்தசாமி

சென்னை நகரில் 28-7-46-ல் இரண்டு திருவிழாக்கள். ஒன்று கம்பன் திருவிழா; இன்னொன்று பாரதிதாசன் திருவிழா; அன்று பாரதி பூரித்தான். சென்னையில் வீடு தோறும், வீதி தோறும் தமிழின் முழக்கம்.

புரசையில் கம்பர் விழா முடியு முன்னமே கூட்டம் கலையத் தொடங்கியது. ஏனெனச் சிலரைக் கேட்டபோது 'பாரதி தாசன் விழாவிற்குப் போகிறோம்', எனக்கூறினர். அப்போது அவர்கள் முகத்தில் அரும்பிய புன்னகை 'தமிழர், புலவன் மறைந்தபின் போற்றும் நாள் போயிற்று; இருக்கும்போதே ஏத்தும் நாள் வந்தது' எனக் குறிப்பதுபோல் இருந்தது. அவர்கள் உள்ளத்தின் ஆர்வமும், நடையின் விரைவும் 'பழமை யிலிருந்த மகிழ்வினையும் புதுமையிலிருந்த உணர்ச்சியினையும்' வெளிப்படுத்தின.

அன்று சென்னை முழுதும், தமிழர் யாவரும் உணர்ச்சி பொங்கிக் களித்தனர். ஆனால் உணர்ச்சி செத்துத் தூங்கியது ஒன்றே ஒன்றுதான். அதுதான் பத்திரிகை உலகு. ஓரிரண்டு தவிர, பல பத்திரிகைகள் அது என்ன ஒலியெனக் கேட்கவு மில்லை. கடலொலி யென நினைத்தது போலும்! ஷெல்லி யென்றும், பைரனென்றும் சொல்லித்திரியும் இவர்கட்கு அவர் களை அந்நாட்டில் எப்படிப் போற்றுகிறார்களென அறிவிக்க, பத்திரிகையில் எந்த இடம் தருகிறார்களெனத் தெரிவிக்க, ஓர் நல்லவர் இல்லாமற் போயினரே! எனத்தான் இரங்கவேண்டி

யிருக்கிறது. இவர்கட்கும் வாழ்வதற்குத் தமிழ் நாட்டில் இடம்; வயிறு வளர்ப்பதற்குத் தமிழர் செல்வம்!

"ஓர் தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ?"

என இடித்துக் கேட்கிறார் பாரதி.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்
உள்ளத்தால் ஒருவர்; உருவத்தாற் பலர்

என அதற்கு விரிவுரை தருகிறார் பாரதி—தாசர்.

இதனை, அன்று கவிஞரைப் போற்றிய நாவலர் சேதுப் பிள்ளையவர்கள் எடுத்துக்கூறி ஏத்தியபோது அங்கு கூடியிருந்த பல்வேறு கொள்கையுடைய தமிழர் உள்ளமும் குழைந்து கூடி விட்டது. ஆம், அன்று தமிழ் நாட்டில் ஓர் புதுமையான நாள்; கொள்கையில் நாம் பலரே; ஆனால், தமிழில் ஒருவரே; எனத் தமிழர் உணர்ந்த நாள். ஒருவரையொருவர் பாராதவர் பார்க்க விரும்பாதவர் எல்லோரும் ஒன்றாய்த் திரண்டு கவிஞரை உயர்த்தினர். "தமிழுயிர் யாவர்க்கும் ஒன்றே" யென உணர்த்தினர். காங்கிரஸ் கொள்கையுடைய கிராமணியார், செங்கல்வராயன் இவர்கள் கவிஞரின் பெருமையைப் பேசினர்.

தோழர் ஜீவானந்தம் கவிஞரின் உள்ளப் புரட்சியைப் போற்றினர். நெடுஞ்செழியன், விஸ்வநாதன் ஆகியோர் கவிஞன் புலமைத்திறனைப் பாவினர். 'பழமைக் குகையைப் புடைத்தெறிந்தோம்' எனப் புலவர்களுக்காக, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வரதராசனார் கவிதையின் அழகைக் கவினுடன் எடுத்துக் காட்டினார். 'எங்களைத் தமிழர் இகழ்ந்தாலும் நாங்கள் விடமாட்டோம்' எனத் தாழ்த்தப்பட்டோருக்காக

மேயர் சிவராஜ் அவர்கள் கவிஞரை மேன்மைப் படுத்தினர். 'உணர்ந்துவிட்டோம், தமிழின் பெருமையை ஆனல் ஆங்கில மோகம் விடவில்லையே' என்பதுபோல் கிருஷ்ணசாமி ஆங்கிலத்தில் பேசினர். ஆனல் 'தமிழனின் சொல்வன்மை ஆங்கில மேனும் தடைபடாது' எனக் காட்டினர். காஞ்சி தங்கவேல் பாரதி அவர்கள் கவிஞருக்குப் பொன்னடை போர்த்தினர். 'தமிழ்நாடு இனி எழும் நாளுமுண்டோ?' என உழைத்துச் சலித்து ஓய்ந்த தமிழன்; ஆண்மை கொண்ட தமிழன் சோமசுந்தரபாரதி தமிழகத்தின் உள்ளங்களித்தார்.

அன்று மதத்தைக் கொண்டு மக்களைத் தட்டி யெழுப்பிய புலவரை மக்கள் வாழ்த்தினர். இன்று அரசியலைப்பாடி ஆர்வத்தைத் தூண்டுவோரை ஆரத்தழுவுகின்றனர் மக்கள். யாவரும் காலக்கட்டினின்று நீங்கவில்லை. அனைவரும் நல்லவர். இனியேனும், தமிழர் ஒருவரை ஒருவர் இகழாமல் தமிழில் யாவரும் ஒன்றுபட்டால் அதுவே 'தமிழன் திருவிழா' காட்டிய தலைசிறந்த உண்மை.

பாரதி தாசன் வாழ்க!

# பொருளாதாரப் புரட்சி!

"பாமரன்"

இந்தியாவில் இன்று எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தம் செய்யப்படுகிறது. இந்த வேலை நிறுத்தங்கள் எல்லாம் இனி தோன்றப்போகும் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் புரட்சிக்கு அறிகுறியே என்றால் மிகையன்று.

இந்தப் புரட்சித் தோற்றத்தைக்கண்டு அதிகார வர்க்கம் ஆத்திரம் கொள்கிறது. 'பொதுஜன அமைதிக்குப் பங்கம்' என்றும் பயமுறுத்துகிறது. தொழிலாளர் உலகம் இன்று அமைதி இழந்து நிற்பது உண்மைதான். இதற்குக் காரணம் யாது?

உழைப்பவன் பட்டினியால் வருந்துவதும் உழையாத சோம்பேறி உண்டு களிப்பதுமான இன்றைய பொருளாதார அமைப்பே இதற்குக் காரணம் அல்லவா?

அன்று மக்களின் தலைவர்களாக விளங்கிய சமய வாதிகள் பாட்டாளியின் பட்டினிக்கு முற்பிறப்பில் அவன் செய்த கர்மமே காரணம் என்றனர். அந்தக் கர்மம் தொலைய கடவுளை யும் கைகாட்டினர். எனவே ஏழைத் தொழிலாளி தன் பட்டினி அகல ஆலயம் கண்ட இடங்களிலெல்லாம்,

என்செய லாவதி யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே பசிமூண்டதுவே

என்று முறையிட்டான்.

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவன்அடிக் கல்லஎன் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேனை படுந்துயர் சற்றல்லவே

என்று வயிற்றைக் காட்டி வாய்விட்டு அலறி அழுதான்; எனினும் பயனில்லை.

பட்டினியானது அப்பனுக்குப் பின் மகன், மகனுக்குப் பின் பேரன் என்று தொத்து நோய்போல் தொடர்ந்து வந்ததே யன்றி, தொலைந்த பாடில்லை. 'ஐயோ, தெய்வமும் என்பால் சதி செய்கின்றதே' என்று பெருமூச் செறிந்தான் ஏழைத் தொழி லாளி.

இந்த நிலையில்தான் இந்தியாவில் சுதந்திர எழுச்சி தோன்றியது. புதிதாகத் தோன்றிய இந்த எழுச்சி தொழிலாளி யின் உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஊட்டியது. மக்களின் தலைமை மதவாதிகளிடமிருந்து அரசியல் வாதிகளின் கைக்கு மாறியது. தலைமை மாறவே தனது தலை விதியும் மாறுமென்று பாட்டாளி மகன் நம்பினான்.

புதிய தலைமையோ, "ஏழையின் வறுமைக்கு ஏகாதிபத்ய ஆட்சியே காரணம்" என்றது 'சுதந்திரம் வந்தால்தானப்பா சோறு வரும்" என்றும் கூறியது. ஏழைத் தொழிலாளி இதை யும் நம்பினான். ஏகாதிபத்தியத்தை ஒழிக்க சட்டத்தை மீறி னான்; சவுக்கடிபட்டான்; சிறை புகுந்தான்; செக்கு வலித்தான். இவ்வளவும் எதற்காக? "சுதந்திரத்தில் இருக்கிறது சோறு" என்ற நம்பிக்கையால்தான். அந்த நம்பிக்கையை இன்றும் அவன் இழந்துவிடவில்லை. அவனது ஏகாதிபத்திய எதிர்ப் புணர்ச்சி மங்கிவிடவில்லை.

ஆனால், எழுபதுவருடங்களாக நடத்திவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் மத்தியில் பாட்டாளியின் பகுத்தறிவு வளர் பிறைபோல் வளர்ந்து கொண்டே வந்தது. இதன் விளைவாகத் தனது பட்டினிக்குக் காரணம் தலைவிதியல்ல; தனியுடமை; தனக்கு வேண்டியது செர்க்கமல்ல; சுகவாழ்வு- என்பதை தொழிலாளி தெள்ளத்தெளிய உணர்ந்தான். நாட்டின் அடிமைத் தனத்திற்கு ஏகாதிபத்தியம் காரணமாக இருப்பதுபோல் தொழிலாளி வர்க்கத்தின் தொல்லைகளுக்கெல்லாம் முதலாளித்துவமே முக்கிய காரணம் என்ற உண்மையும் அவனுக்குப் புலனாயிற்று.

ஆகவே, ஏகாதிபத்யத்தை வைக்கும் குழியில் முதலாளித்துவத்தையும் வைத்து மூடிவிடவேண்டுமென்று அவன் துடியாய்த் துடிக்கிறான். அதன்விளைவுதான் தற்போது தோன்றியுள்ள வேலை நிறுத்தங்கள். ஆகவே இதைக்கண்டு ஆத்திரப் படுவது அறிவுடைமையாகாது; தேசபக்தியுமல்ல.

"சோஷியலிசம் வேண்டியதுதான். ஆனால் இந்திய பண்பாடுகளின் அடிப்படையில்தான் அதுவரவேண்டும்" என்கிறார் ஆந்திரநாட்டு அறிவாளி ஒருவர். இந்தியப்பண்பாடு என்றால் பாட்டாளியின் நினைவுக்கு வருவது "தலைவிதி தத்துவம்" "தர்மகர்த்தா பொதுவுடைமை" இவைகள்தான்.


தலைவிதி தத்துவத்தை ஏற்றால், கஞ்சி வேண்டுபவன் கடவுளிடம் முறையிடவேண்டும். தர்மகர்த்தா முறையை ஏற்றால் பட்டினி தொலைய பணக்காரனிடம் கையேந்த வேண்டும். அப்படியானால் அரசாங்கம் இருப்பது எதற்காக?

அதிகாரவர்க்கமே! "அமைதி" என்ற பெயரால் தொழிலாளரின் பொருளாதாரப் புரட்சியை அழித்துவிடலாம் என்று ஆசைகொள்ளாதே! பட்டினியால்வாடும் தொழிலாளி அமைதி கொள்ளுமிடம் சவக்குழி ஒன்றுதான்.

தேசபக்தர்களே! உங்களது தேசபக்திக்குச் சோதனைக் காலம் ஏற்பட்டுள்ளது. “சுதந்திரம்தான் சோறுபோடும்” என்று ஏழைக்குக் கற்றுத்தந்த நீங்கள், “ஏகாதிபத்தியத்துடன் முதலாளித்துவமும் ஒழிந்த சுதந்திர நாட்டில்தான் ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் இன்புற்று வாழமுடியும்” என்று தொழிலாளிவர்க்கம் கூறினால், அதை ஏற்கத் தயங்குவது எதற்காக? வெள்ளை முதலாளியோடு கறுப்பு முதலாளிக்கும் விடை கொடுத்து விடுவோம்; வீறிட்டெழுங்கள்.

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்


G. MUNIVELU CHETTY
RADIO DEALER



ALBA
FERRANTI
AMBASSADOR
G.E.C.
முதலிய
ரேடியோக்கள்
கிடைக்கும்.

ALBA

விவரங்களுக்கு :
250, லிங்கிசெட்டி தெரு, சென்னை-1

# SCABINIL—ஸ்கேபினில்

ஸ்கேபினில்—சொரி சிறங்கு மருந்து ஒரு மூலிகை யிலிருந்து மிகவும் நேர்த்தியான ரசாயன முறைப்படி தயாரிக் கப்பட்ட மருந்து.

மகாத்மா காந்தியின் டாக்டர், **ஸ்ரீமதி சுசீலா நாயரின்** நற்சாட்சிப் பத்திரம் :—

ராஜாஜி கொண்டுவந்த மருந்தை நான் மூன்றுபேரின் மேல் உபயோகித்தேன்.

கேஸ் 1 :—குழந்தை பத்து வயது. தேகம் பூராவும் சொரி சிரங்கு பரவியிருந்தது. விரல்களின் மத்தியில் சீயும் கோத்துக்கொண்டிருந்தது. மூன்று முறை 'ஸ்கேபினில்' உபயோகித்ததில் பூராவும் குணமாகி விட்டது.

கேஸ் 2 :—தாலிமி சங்கின் டைபிஸ்ட்: சொரி சிரங்கு மிதமாயிருந்தது. இதுவும் மூன்றே முறைகளில் பூராவும் குணமாகிவிட்டது.

கேஸ் 3 :—தாசப்பாஜியின் புதல்வர். மூன்றே முறை களில் பாதிக்கு மேல் குணமாகியிருந்தது.

மேற்கூறிய கேஸ்களை யெல்லாம் ஆஸ்பத்திரியிலிருந்து கந்தகம் சேர்ந்த களிம்பை (Sulphur Ointment) ஒரு வாரத்திற்குமேல் உபயோகித்தும் அதிக குணமொன்றும் ஏற்பட்டிருக்கவில்லை

**ஸ்வாதி பிராடக்ட்ஸ் லிமிடெட்**

**தபால் பெட்டி 655, மதராஸ்**



Printed at The Merchantile Press, 2/43, Muthumari Chetty Street, Mannady, Madras, Q. H. No. 264-D.